*Registered No. M. 408.*

உ

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு.

திங்கட்கொருமுறைதோன்றித்திகழ்வது.

# THE THIRUNAVUKARASU.

PUBLISHED ONCE IN A MONTH.

பத்திராதிபர்—தி. பா. சிவராமபிள்ளை.

புத்தகம் ௨.] திருநெல்வேலி: குரோதிஸு தைமீ உ௰-௨; 1905-ம்ஸு பிப்பிரவரிமீ 1-௨ [இலக்கம் க.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு"

உ

திருச்சிற்றம்பலம்.

"மருந்தவை மந்திர மறுமைநன் னெறியவை மற்று மெல்லா, மருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே, பொருந்துதண் புறவினிற் கொன்றை பொன் சொரிதரத் துன்றுபைம்பூஞ், செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே லியுறை செல்வர்தாமே.

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி, மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந் தெ னுளமே புகுந்த வதனால், ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே, ஆச றுநல்ல நல்ல வவை நல்ல நல்ல வடியா ரவர்க்கு மிகவே"

திருச்சிற்றம்பலம்.

---

உ

திருநாவுக்கரசின்

## [illegible]போஷகர்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஸ்ரீமத், [illegible]மஹேஸ்வர சிவாசாரிய சுவாமிகள், திருநெல்வேலி. | 10 | 0 | 0 |
| ஸ்ரீமான், காடல்குடி, மிட்டாதார், A. சோணசலம்பிள்ளையவர்கள், திருநெல்வேலி. | 10 | 0 | 0 |
| ஸ்ரீமான், காடல்குடி மிட்டாதார், S. அருணசலம்பிள்ளையவர்கள், திருநெல்வேலி. | 10 | 0 | 0 |
| ஸ்ரீமான், S. திருமலையப்பபிள்ளையவர்கள், திருநெல்வேலி. | 10 | 0 | 0 |
| ஸ்ரீமான், M. S சிவகுருநாதபிள்ளையவர்கள், பாளையங்கோட்டை நேட்டிவ் சேவிங்ஸ் பாங்கு. | 15 | 0 | 0 |
| ஸ்ரீமான், P. M கைலாசம்பிள்ளையவர்கள், முனிசிப்பல் சேர்மேன், திருநெல்வேலி, | 20 | 0 | 0 |
| ஸ்ரீமான், T. S. சுப்பிரமணியபிள்ளையவர்கள், டிஸ்டிரிக்கட்டுக் கோர்ட்ப்ளீடர், திருநெல்வேலி. | 10 | 0 | 0 |

## ஆன்மசிருட்டி.

1. ஆன்மாச் சிருட்டிக்கப்பட்டதெனச் சில அல்லது பல சமயிகள் கருதுகின்றனர்; அங்ஙனம் சிருட்டிக்கப்பட்டதாயின், எதனாற் சிருஷ்டிக்கப்படும்?

2. ஆன்மா அறிவுமயமாயிருத்தல்கூடும்; ஆகவின் அது அறிவாற் சிருட்டிக்கப்படுமெனின், அவ்வறிவு அதற்குமுன் யாண்டிருந்தது?

3. சிருட்டிப்பவனிடத்திருந்ததெனிற், சிருட்டிப்பவனறிவு முற்றறிவாதலின், சிருட்டிக்கப்பட்டதும் அவ்வாறாகாமைக்குக் காரணமென்னை?

4. சிருட்டிக்கப்பட்ட அறிவு மாயையால் மறைக்கப்படுவதெனின், அது சிருட்டிப்பவற்கும் எய்துமோ, அன்றோ?

5. அனறியும் சிருட்டிக்கப்பட்டதுப், தன்னெத்த பிறிதொன்றை வாழையடி வாழையாய்ச் சிருட்டிக்குமோ அன்றோ? இதற்குக் கருத்தா எப்பொழுதும் ஒருவனேயிருத்தல்வேண்டுமென்பதென்னை?

உண்மை உசாவுவோன்.

---

## அற்புதம்.

1. அற்புதம் வேண்டுவ தவசியமா?
2. முற்காலத்து நடந்தனவாகக் கூறப்படும் அற்புதங்கள் இக்காலத் தேனடக்கவில்லை?

3. அநேக சமயிகள் தத்தம் சமய ஸ்தாபனத்திற்கு அற்புதங்களவசியம் என்று கருதியதன் காரணமென்னை?

4. அற்புதமென்றாலென்ன? உள்ளதை இல்லதாகவும், இல்லதை உள்ளதாகவும் செய்து விடுவதுதானா?

5. இப்படிச் செய்யக் கடவுளுக்குச் சம்மதமாயிருக்குமா? இருக்குமாயின், தாம் ஏற்படுத்திய விதிக்குமாறாக வேறொன்று செய்தல் கடவுட்டன்மைக்கு விரோதமல்லவா?

உண்மை உசாவுவோன்.

கையொப்பவிகிதம்:— உள்ளூர், வெளியூராருக்குத் தபாற்கூலி யுள்பட முன்பணமாக ஒரு வருஷத்திற்கு ரூ. 1, மோராமேன் சிங்கப்பூருக்கு ரூ. 2. தனிப்பிரதி 1-க்கு அணு 2.

உ

சிவமயம்.

# திருநாவுக்கரசு.

திருச்சிற்றம்பலம்.

"புலனொடு டாடித் திரிமனத்தவர் பொறிசெய் காமத் துரிச டக்கிய—புனித நேசத் தொடுதமக்கையர் புணர்வி னுலுற் றலைசெய யக்குடர், சுலவு சூலைப் பிணிகெ டுத்தொளிர் சுடுவெ ணீறிட் டமண கற்றிய—துணிவினின்மூப் புரமெ ரித்தவர் சுழலி லேபட் டிடுத வத்தின, ருலகின் மாயப் பிறவி யைச்சரு முண் விலாவப் பெருமயக்கினை—யொழிய வாய்மைக் கவிதையிற் பலவுபரி பாகப் பொருள்ப ரப்பிய, வலகின் ஞானக் கடலி டைப்படு மமிர்த யோகச் சிவவொ ளிப்புக—வடிய ரோமுக் கருளி னைச்செயு மரைய தேவத் திருவ டிக்களே."

திருச்சிற்றம்பலம்.

## நமது பத்திரிகை.

திருநாவுக்கரசென்னும் திருநாம விசேடத்தாலும், கிருபாசமுத்திரமும் எமது சற்குருமூர்த்திகளுமாகிய ஸ்ரீமத் உமாமஹேஸ்வர சிவாசாரிய சுவாமிகளது திருவருட் பிரசாதத்தாலும், பெரியோர்களின் ஆசிர்வாதத்தாலும் நமது திருநாவுக்கரசு தன் முதலாவது ஆண்டு நிரம்பப்பெற்று, இவ்விரண்டாவதாண்டு தொடங்கப்பெற்றுள்ளது, இவ்வாறே என்றும் நின்று நிலவுகவென்று திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சென்ற வருடத்திலே, நமது திருநாவுக்கரசு தன் குழந்தைப் பருவத்திற் கேற்பத், தன்னுலின்றவளவிலே, இத் தமிழுலகத்திற் கொருசிறிதாயினும் நன்மை செய்திருக்குமாயின், அது இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்துள்ள விவேகிகளால் விளைந்ததொன்றாகலின், அவர்கட் கித் தமிழுலகம் மிகவும் கடப்பாடுடையதாகின்றது; அம்மட்டோ! அவ்வறிவாளர்கள் செய்த விஷயதானமும், பொருளுதவியில்லையாயின், அச்சு வாகனமேறித் திருவுலாப் போந்து சிறப்பெய்துதல் கைகூடாமையின், அது கூடுதற் பொருட்டு இப்பத்திரிகைக்குப் பொருளுதவி செய்தோர்க்கும் அதுவே மீட்டும், மிகவும் கடப்பாடுடையதொன்றாம்.

நாம் நமது திருநாவுக்கரசின் முதற் புத்தக முதலாவ திலக்கப் பத்திரிகையிலேயே குறித்துள்ளபடியவாறு இப்பத்திரிகை, தன்னைப் படிப்போரனைவரையு மொருங்கே மகிழ்வித்திடுதலும், மகிழ்ந்தோரனைவரும் இப்பத்திரிகைக் கொருங்கே பொருளுதவி செய்யும் விருப்பும் வலியுமுடையராதலும் செல்லாமையிற், சென்ற வருடத்திலே சிலர், நமது திருவுக்கரசை அன்புடனேற்றுக்கொள்ளுதலின்றி, மறுத்தாராயினும், பலர் அங்ஙனமாகாது மிக்க அன்புடனேற்றுப் பொருளுதவுதலுஞ் செய்து ஆதரித்திருக்கின்றார்கள். அவர்கட்கு நாம் மிக்க வந்தனம் சொல்கின்றோம்; திருவுடையரும் தெள்ளியருமாகிய அன்பர்கள் இன்னும் பற்பலர் வெளிவந்து, நமது பத்திரிகையை ஆதரித்திடுகவென், றவர்களை நாம் மிக்க அன்பும் பணிவும் பொருந்த வேண்டுகின்றோம்.

திருவருள் முன்னிற்க.

## பரமனையே பாடுவார் இடம்.

### திருக்குற்றால மாலை.

திருக்குற்றாலத் தலபுராணமுடையார்,
திரிகூட ராசப்ப கவிராஜமூர்த்திகள் அருளியது.

(புத். க. இலக். ௯௪. 4-வதுபக்கத் தொடர்ச்சி.)

பேராசைக் கள்ளத்தை யுள்ளே யடக்கிப் பிறருக் கெல்லாம், பாராசை யற்றவர் போற்றிரி வேன்பசுத் தோல்புனைந்து, போராசை கொண்ட புலிநானென னாசையைப் போக்குகண்டா, யோரா சையுமற்ற யோகீகுற் றாலத் துறைபவனே. (61)

கழிக்கும் பலபொழு தோர்பொழு தாய்க்கலங் காமலுன்னே, விழிக்கும் விழிவெளி யாவதென் றோவெண் ணிலாக்கதிரைப், பழிக்குந்திரி கூடத் தருவிகன் னீர்பக லோனைவெம்மை, யொழிக்குந் திவ[illegible] தெளிக்குங் குற் றாலத் துறைபவனே. (62)

செருமிக் கவலை யுளந்[illegible]மாறித் [illegible]பொருமிப், பொருமிக் கரைவது கண்டிரங் காய்புலலு[illegible] பூடுங்கலுங், தருமிக்க பட்சி மிருகங்க ளாதி சராசரமு, மொருமிக்கத் தெய்வ வடிவாங்குற் றாலத் துறைபவனே. (63)

சிறையோ படுவ தினிச்சவை யோதினந் தான்பதைதன், முறையோ முறையிடல் கேட்கிலை யோமுன்னை நாளிற்செய்த, குறையோ குறையுன்முன் னேநிற்கு மோகொண்ட கோபமென்னே, வுறையோங்கு கொண்ட லுலாவுங்குற் றாலத் துறைபவனே. (64)

வருக்காம் பலகரும் வைப்பார்க்க நன்றொரு வட்டெனவே, பெருக்காசை விட்டுநின் றானே பாவிப் பிறவியின்வேர், கருக்காம லென்றுமென் சிந்தைக்குள்ளே யொருக் காற்றெளிவு, மொருக்கான் மயக்கமு மாமோகுற் றாலத் துறைபவனே. (65)

பொறுக்கும் படைகொண்டு கோபத்தை மாய்த்துப் புரையற்றநான், வெறுப்பு விருப்பற் றிருப்பதென் றோவண்டம் விண்டுகிறு, கிறுக்கும் படிமலை யைச்சிலை யாக்கிக் கிளர்புரங்க, ளொறுக்குந் தனிபெரு வீராகுற் றாலத் துறைபவனே. (66)

தண்டேன் மலர்சொரி சண்பகச் சோலையுஞ் சங்கி
தியும், பண்டே பழகுநின் சித்ரா நதியும் பலவளமுங்,
கண்டே பிரிந்துந் தரித்தேனென் போலொத்த வன்னெ
ஞ்சர்தா, மூண்டேயுன் கற்பனைக் குள்ளேகுற் றாலத்
துறைபவனே. (67)

தருகோடி யம்புயத் தாடொழும் போது சதுர்யுக,
மிருகோ டியுகொடிப் போதொக்கு மேதுன்ப மீட்டுங்
கவ்வை, யருகோடி யுன்னைப் பிரிந்தா லணைகொடிப்
போதுமெனக், கொருகோடி கோடி யுகங்காண்குற் றா
லத் துறைபவனே. (68)

காண்பதெல் லாங்கண் மயக்கமென் றேமனங் கண்
டிருந்தும், வீண்பல கவ்வைக்கு ளோடிய தால்வந்து
மீட்டருளாய், சேண்படர் கங்கைச் சடையாய் பிரமன்
சிரத்தினிலொன், றூண்பலி தேடுங் கலத்தாய்குற் றா
லத் துறைபவனே. (69)

கண்பார்த்துச் சோர மிடுங்கள்வ னாவனைக் கள்ள
மிட்டுப், பண்பாரத வுன்னைப் பணிவதென றேபுயல்
பார்த்துநின்று, விண்பாரக்குஞ் சாதகம் போலுனைப் பார்த
துநின மெய்யருட்பா, லுண்பாரக்கு ஞானப் பெருக்கே
குற் றாலத் துறைபவனே. (70)

சிறுகாலந் தாயர் முலைப்பான் மயக்கஞ் செகத்தறிவு,
பெறுகால மாதர் முலைமேன் மயக்கம் பெருங்கிழமா, யிறு
காலம் வஞ்சப் பிணியான் மயக்கமுன் னின்பத்தை நா,
னுறுகால மாவதெக் காலங்குற் றாலத் துறைபவனே (71)

ஆணவங் காட்டுவித் தாசையுங் காட்டுவித் தார்க்கு
மில்லா, நாணமுங் காட்டிய மாயையி னுனெடு நாட்க
ருச்சை, வீணவம் போக்கிவிட் டேனிரங் காய்கடல்
வெவ்விடத்தி, னூணலங் கார மிடற்றாய்குற் றாலத் து
றைபவனே. (72)

கருநோயுங் கன்மப் பிறவியி னோயுங் கருத்திற்கொள
வை, பொருநோயும் பூண்ட சரீரத்தி னோய்களும் போக்
குந்தெய்வத், திருநீ றுடையநின் சித்ரா நதிக்கரை சேர்ந்
தவன்றே, யொருநோயு மின்றித் தவிர்ந்தேன்குற் றா
லத் துறைபவனே. (73)

மறைப்பொரு ளாலநின் சேவடி வாழ்த்தி வடவரு
வித், துறைப்புன லாடிக் குழல்வாய் மொழியுடன்
சோதியுனை, யிறைப்பொழு தாகிலு முன்னே தியானித்
திருக்கநெஞ்சி, லுறைப்பிலை யேயென்ன செய்வேன்
குற் றாலத் துறைபவனே. (74)

செய்வதெல் லாங்குற்ற மேயத னாற்செகத் தோர்க
ளென்னை, வைவதெல் லாங்கொடுந் துட்டனென் றே
கட்ட வல்வினையா, னைவதெல் லாமென் பொருட்டே
சரண்புக்கு நானினிமே, லுய்வது நின்பொருட் டையா
குற் றாலத் துறைபவனே. (75)

தேயா மயக்கந் தெளிந்தோர்கள் முன்னந் தெளிவொ
ன்றில்லாப், பேயாக நின்று பிதற்றுவ னேமனப் பேதை
மையான், மாயா மலத்துக்குள் வீணே கிடந்து மயங்கு
மிந்த, வோயா மயக்கந் தவிர்ப்பாய்குற் றாலத் துறைப
வனே. (76)

எளியேனை யாட்டுஞ் செயல்யாவு முன்செய லென்
றுகன்றாய்ச், தெளியேனெவ் வாறு தெளிவிப்பை யோ
தினை யேய்வனாயே, வளியே மறிபுன லேகன லேநெ
டு வானகமே, யொளியே பரந்த வெளியேகுற் றாலத்
துறைபவனே. (77)

அடக்கிக்கொண் டாலு மடங்கிக்கொள் வேன்புவி
யாதிக்க நீ, நடத்திக்கொண் டாலு நடந்துகொள் வே
னன்றி நானென்றென்னைத், தொடக்கிக்கொண் டா
ட்ட மிடாதே சகல தொழிற்குமெண்சா, னுடக்கைக்
கொண் டாட்டிய சித்தாகுற் றாலத் துறைபவனே. (78)

எழுதிண் புவியு நொடிக்கேற்குஞ் சிந்தையெருதுமங்
கோர், பொழுதென் றுருமடக் கேறி வராது புலன்
கலப்பை, பழுதன்றிச் சோக்கவல் லேனல்ல னுன்பர
மாநிலத்தி, லுழுதுண்டு வாழ்வதெவ் வாறேகுற் றாலத்
துறைபவனே. (79)

பிறர்பொரு ளாசித்துப் பொய்பேசிச் சாணும் பிழை
ப்பதற்கா, வறமுத னன்கு நிலைபிழைத் தேனடி யார்க்
கடிமைத், திறமில னாகிலு நின்னடி யார்திருக் கூட்ட
மல்லா, லுறவினி வேறிலை யாளவாய்குற் றாலத் துறை
பவனே. (80)

கொலைபா தகஞ்செய்யக் கற்றேனுன் பத்தர் குழாத்
திற்செல்ல, மலையாத வுண்மை வரக்கற்றி லேனெனை
வாழ்விப்பையோ, நிலையா ரணங்களுக் கெட்டாத நாத
நெடுவெளிக்கே, யுலையாத வானந்தக் கூத்தாகுற் றாலத்
துறைபவனே. (81)

ஆலமென் றாலு மமுதா முனைக்கண்ட வாடரவின்,
கோலமு மாலையின் கோலம தாங்கொடி யேன்வினையுங்,
காலமுஞ் சாலநன் றாவதென் றேவனா காலருவி, யோ
லமென் றார்க்குந் துறைசூழ்குற் றாலத் துறைபவனே.

தொண்டொன் றுனக்குப் புரியேன் மகளிர் சுரிகு
ழற்கே, வண்டொன்று மாலையென் றுஞ்சுழல் வேனெ
னை வாழ்விப்பையோ, விண்டொன்றும் வெள்ளிப் பொ
ருப்பாய் விருப்பும் வெறுப்புமில்லா, யுண்டென் றவர்
மனத் துள்ளாய்குற் றாலத் துறைபவனே. (83)

வன்பெருங் காய மெடுத்தவர் யார்க்கும் வருவதின்ப,
துன்பங்கள் கூடத் தொடர்ந்தல்ல வோதொடர்ந் தாலு
மித்தை, யென்பாஞ் சாட்டி யிடையாம லொன்றுபட்
டென்றைக்குநா, னுன்பாஞ் சாட்டி யிருப்பேன்குற்
றாலத் துறைபவனே. (84)

[இன்னும் வரும்.]

M. C. சுப்பிரமணியக் கவிராஜர்.

---

## *போலிவேதாந்த மறுப்பு.

பிரமப்பொருள் பிரபஞ்சமாயிற் றென்பது பிறர் கூ
றும் பக்கம். அது பொருந்தாதென்பது மறுத்துரைக்கும்
சித்தாந்தம். என்னை? தபதியானே பொன் பணியாமாறு
போலச் செய்வோரின்றிச் செய்வினை யின்மையின். இஃ
தென்சொல்லியவாறேவெனின், பொன்னொருவன்செய்
யப் பணியாவதன்றி, தானே பணியாகாதவாறுபோல், பிர
மப்பொருள் பிரபஞ்சமாங்கால், தன்னின் வேறாய ஒருவ

---

* நரசிங்கநல்லூர் க்ஷேத்திரத்தில், நடந்த 'சாதுசங்க
மஹோற்சவ' தினங்களில், ஒருநாளிரவு நடந்த உபந்நியா
சத்தின் மறுப்பு.

ளுல் செய்யப்பட்டதாய்முடியு மென்றவா றாயிற்று. அற்றன்று; இனி எவற்றையும் தோற்றுவிப்பது பிரமமாமெனின், நன்று சொன்னாய். செயப்படுபொருளெல்லாம் உபாதானத்தை வேண்டப்படும். ஆகலி னவ்வுபாதானம் வினைமுதலாகாது. என்னை? குடத்திற்கு உபாதானமாய மண் வினைமுதலாய குயவனாகாதவாறுபோ லாகலின். ஆகலின், பிரபஞ்சத்திற் குபாதானம் வினைமுதலாய பிரமப்பொருட்கு வேறாயொன் றுளதாதல்வேண்டுமென் றறிந்துகொள்க. அற்றே, லவ்வுபாதானமே யமையும், வினைமுதல் வேண்டாம்பிற வெனின், அற்றன்று. அவ்வுபாதானம் ஜடப்பொருளாகலி னதுதானே பிரபஞ்சமாக மாட்டாதென்பது. இனி, உலகம் பிராந்தியென்பதூஉம் ஆராய்ச்சியில்கூற்றேயா மென் றறிக. என்னை? பிராந்தியானவதொன் றின்மையின். அல்லதூஉம், காரணகாரியங்கட்குத் தம்முள் வேற்றுமையின் றென்பது எல்லார்க்கு மொப்ப முடிந்தமையி னிப் பிரபஞ்சம் பிரமப்பொருளின்பரிணாமமெனக் கோடுமெனி னதுவுமப், பரமபொருளாதல்வேண்டுமென்பது. ஆதலின், அங்ஙனம் கோடல் மேற்கூறிப்போந்தவாறு, தோல்வித்தானமாய் முடியுமென்றொழிக. அல்லதூஉம், வினைமாசொன் றுமின்றிப் பரமார்த்தநிலையின் வைகுவதப் பரம்பொருள். அதுவே காணெனில், மாயாஉபாதி சம்பந்தமுடைய நீ, அவ்வுபாதி நீங்கிநின்ற பிரமப்பொருளாகா யென்பதொருதலை. அல்லதூஉம் பரம்பொருட்கு அவித்தையுளதாதற் கேதுவென்னை? நம்மனோர்போல் மறந்துமறந் தறிதலின்றி, அறிந்தாங்கறிவதாய பரம்பொருள், தொழிற்படுங்கருவிக ளொன்றுமின்றிக் கேவலமாய் அதீதாவத்தையினின் றுழி அறியுமாறின்றிப், பின்னர்க் கலைமுதலிய கருவிகளா னறிவிக்க அறிந்து வருதல் தகாதென்பது.

இனி, அநிர்வசனீயமறுப்பு.

பிரபஞ்சமநிர்வசனீயமா மென்பது பிறர் கூறும் பக்கம். அஃது அங்ஙனமன்றென்பது மறுத்துரைக்கும் சித்தாந்தம். அநிர்வசனமென் றேதுமாற்றாற்படு மிழுக்கென்னையெனிற் கூறுதும். அங்ஙனமநிர்வசனீயமாய்க் கூறப்படும்பொரு ளுண்டோ? இன்றோ? வெனக் கடாயினார்க் கின்றாமென விடுப்பின், உணராதபொருட் கோதிய குற்றமென்று, மஞ்சி யுண்டெனின் பிரபஞ்ச முள்பொருளாவதன்றி அநிர்வசனமாதலின் றென்பதற்கு நின்வாய்மொழியே சான்றாயிற்று. ஈண்டுத்தோற்றங்கூறிய தில்பொருட்கோ, உள்பொருட்கோ, அநிர்வசனப் பொருட்கோ? இல்பொருட்கெனி னது முயற்கோடுபோ லொருஞான்றும் தோன்றுமா றில்லை. அற்றேல் குடம்போல உள்பொருட்கும் தோற்றம் கொடாதென்பது. அல்லதூஉம் அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருடானென் றுண்டோவெனக் கடாயினாற்குண்டெனி னுள்பொருளேயா, மின்றெனி னில்பொருளேயாமெனப் பட்டு அநிர்வசனமென்பது போலியா யொழியும். அல்லதூஉ மநிர்வசனப் பொருள் சூனியமாகலி னதற்குத் தோற்றமும் கூடாது. ஆகலி னில்பொருட்கு மநிர்வசனப் பொருட்கும் தோற்றம் கொடாமையின், பாரிசேட அளவையால் காரண காரியமிரண்டு முள்பொருளேயாய், காரணத்தினின்றும் காரியமொரு வினைமுதலான் வெளிப்பட்டுத் தோன்றுமென்பது. குயவனாவான் திகிரிமுதலிய துணைக்காரணங்களை மண்ணாய முதற்காரணத்தின்கண் ணுய்ப்ப, அதனினின்று மாடமுதலிய காரியம் தோன்றாது. குடமுதலிய காரியம் வெளிப்பட்டுத் தோன்றுமென்பதவ் வெதிர்மறைமுகத்தானு முடன்பாட்டுமுகத்தானு மறியப்படுமென்பது.

இனி, காரணகாரியங்கட்குத் தம்முள் வேற்றுமையுண்டென்பது மேற்கூறிப் போந்தமையின், காரணமுள்பொருளாகவே, காரியமும் தன்கண் சூக்குமமாயுள்ளதாய், அதுபின்னர் தூலரூபமாய் விளங்கித்தோன்றுதலொரு வினைமுதலானு மென்பது தானேபோதருமென்க.

<u>இனிப், பாரத பாகவத விபரீதப்பொருட்கோட் போலித் திருட்டாந்தமறுப்பு.</u> பாரதம கேட்ட வேந்தற்கும் பாகவதமகேட்ட பாரிக்கும் முறையே பதினாறாயிரத்தேழு மகடூஉவும், நான்கு ஆடூஉவும் வேண்டுமென்னும் நிகழ்ச்சி உளதோ இல்தோவென்னு மையப்பாட்டின்கண், உளதாமென்பது பிறர்கூறும் பக்க, மிலதாமென்பது மறுத்துரைக்கும் சித்தாந்தம். கயிற்றாற் பந்தமுற்ற அவ்விருவர் கைகள் பண்டங்களைப் பற்றாதொழிந்தன வென்னு முவமைக்கு, மொன்றானும் பந்தமுறாது சார்ந்ததன்மயமாய் நின்ற அவர் மனங்கட்கும் தம்முட் பொதுவியல்பாவது உறுத லுறாமை யென்னும் வேற்றியல்பாகிய சிறப்பியல்பாமென்றே படும். படவே, அது சிறிதும் பொருந்தாதாய் முடியுமென் றொழிக.

இனிச், காட்டகத்துக்கோட்டையுவமை யெடுத்தோதினீர். அதுவும் பொருந்தாமை சிறிது காட்டுதும். அஃதில்பொருளோ உள்பொருளோ? உள்பொருளெனிற்பொருந்தாது. என்னை? அதன்மாட்டு வைகி அவரிருவரையுமீர்த்துக்கொண்ட பொருளொன்றின்மையின். அல்லதூஉம், அதுவதனை உடைத்தாமென்றதற்குப் பிரமாணமென்னை? அது பிரமாணக்தமுதலியவற்றுளொன்றாகுமோ, அன்றாகுமோ? ஒன்றாயினதற்குச்சுருதி என்னையென் றின்னோரன்ன வாசங்கைகட்கெல்லா மிறையின்மையின்.

இஞ்ஞான்றைச் சைவருள் ஒருசாரார் உண்மை வேதாந்த வாக்கியங்களையெல்லாம் தமக்குத் தோன்றியவாறெல்லா மீர்த்திடைப்படுத்து உபந்நியாசம் செய்து தம்முன்வைத்துத் தாமே நலம்பாராட்டா நிற்பர். அது கேட்ட பேதைகளு மவர் சொல்லிய பொருளையும் வேதாந்த வாக்கியத்தையும் முன்பின் மலைவற நோக்கியஃதியையு மற்றியஃதியையாதெனத் தெரிந்துகொள்ளமாட்டாது, கதானுகதிக நியாயத்தானே, அவர்தம் மதத்துட்டானே வீழ்ந்துகூடி நலயபாராட்டா நிற்பர். அவ்வுபந்நியாசத்துளுள்ள குற்றங்களையெல்லா மாராய்தல் மணற்சோற்றுட் கல்லாய்தல் போலாம். ஆகலி னதனை லக்ஷியத்தின்பாற் படுத்துக் கண்டித்தல் மகாபாணப் பிரயோகத்திற்கு முயலை லக்ஷியப்படுத்தல் போலாம். ஆயினும், சாஸ்திரப் பிரவேசமின்றி, மந்தமதியுடையார்க்கெல்லா மதிற் புத்திப்பிரம்சம் வாராமல், சிறிதொரு வழிகாட்டுகவெனப் பெரியோர் கேட்டலி னதற் குடன்பட்டு ஸ்தாலீபுலாக நியாயம்பற்றி, அதன்கண் ஆண்டாண்டுச் சிற்சில குற்றங்கள் மாத்திரையே யெடுத்துக்காட்டுதும்.

திருமான் சிவஞான மெய்கண்டதேசிகர்
உழைமுகத்துக்கேட்கு மாணாக்கன்.

உ

## திருநெல்வேலி மாணவர் சங்கத்தின் ஹிந்து மதாபிமானிகளிற் சிலர் விக்கிரஹாராதன விஷயமாய்ப் பிரசுரஞ் செய்திருக்கிற பத்திரிகையிற் கண்ட வினாக்களுக்கு

## விடை.

5-வது வினா:—"கடவுளுக்கு ரூபம் கொடுக்கும் பலவீனத்தால் அனேகமாய் மனிதரூபமே கொடுத்த போதிலும் அத்துடன் நிற்காமல் மிருகரூபமும், பக்ஷிரூபமும், கேவல ஜந்து ரூபமும் கொடுக்கலாமா?"

இதற்கு விடை:— இதற்கு முன் சொல்லப்பட்ட விடைகளினால், ரூபம் பற்றியே கடவுளைத் தியானஞ்செய்யவேண்டுமென்பது ஏற்பட்டது. அப்படி ரூபத்தின் மூலமாய்த் தியானஞ்செய்வதவசியமானால், மனிதரூபத்தோடு நிற்காமல், கீழ்ப்பட்ட பிராணிகளின் ரூபத்தைத் தியானத்திற்குபயோகப்படுத்துவது நியாயமாவென்று இந்த வினா கேட்கப்பட்டிருக்கிறது. ஸர்வாந்தர்யாமியாயும், ஸ்வபாவத்தில் ரூபரஹிதராயுமிருக்கிற பரமாத்மாவுக்கு, ரூபங்கள் விஷயமாக, தாரதம்மியங்கிடையாது. ஸகல ரூபங்களும் பிரமத்திலுண்டாகி, பிரமத்தில் ஸ்திதியையடைந்து, பிரம்மத்தினிடத்தில் லயமாகிறது. ஸச்சிதானந்தமாத்திர ஸ்வரூபியாயும், ஸ்தூல சூக்ஷ்ம ரூபங்கள் யாவற்றுக்கும் ஆதாரமாயுமிருக்கிற பரம்பொருளுக்கு ரூபங்கள்விஷயத்தில் உயர்வுதாழ் விருக்க நியாயமில்லை. கிஞ்சிக்ஞனாயிருக்கிற ஜீவனுக்கு உயர்வுதாழ் வென்கிற வியவஹார மேற்பட்டிருக்கிறதேயொழிய, ஸர்வக்ஞனாயிருக்கிற பரமாத்மாவுக்கு அந்த வித்தியாசமில்லை. அற்பர்களாயிருக்கிற நமக்குச் சிலரூபங்கள் சிலாக்கியமென்றும், மற்றவைகள் கீழ்ப்பட்டனவென்றும் தோன்றுகிறது. வயதில் ஸ்வல்ப தாரதம்மியமுள்ள சிறுகுழந்தைகள், ஒருவருக்கொருவர் சச்சரவுசெய்யும்போது, நான் பெரியவன் நான் பெரியவனென்கிறதாகச் சொல்லிக்கொள்வதுபோல் நாம் வியவஹரித்து வருகிறோம். ஸகல ஜீவராசிகளுக்கும் பிதா ஸ்தானத்திலிருக்கிற ஈசுவரருக்கு, ஸகல ரூபங்களும் அவருடைய குழந்தைகளின் ரூபங்களேயொழிய ஷெரூபங்களுக்குள்ளிருக்கிற அவாந்தர பேதங்களைப் பெரிதாக எண்ணி, அவர் சிலரூபத்தை சிலாக்கியமாயும் பெரிதாயும், மற்றதை கௌரவக் குறைவாகவும் எண்ணுவதற்குக்காரணமில்லை. பிதா குழந்தைகளிடம் வந்து, அந்தந்தக் குழந்தைகளுக்குத் தக்கபடி, மழலைச்சொல்லையனுசரித்துப் போதிப்பிவிப்பது போலவும், இன்பத்தைக்கொடுப்பதுபோலவும், பரமேஸ்வரரும் தம்முடைய அம்சங்களாகிய ஜீவர்களிடம் அந்தந்த ஸமயங்களில் ஆவிர்ப்பவித்து அந்தந்தப் பிரகிருதத்திற்கும், அந்தந்தக் காரியங்களுக்குந் தக்க ரூபங்களை ஸ்வீகரித்து தர்மஸம்ஸ்தாபன அனுக்கிரஹாதிகளைச் செய்திருக்கிறார். ஸர்வ வியாபியாகவும், ரூபரஹிதராகவும், இச்சாமாத்திரத்தினால் எவ்வித ரூபத்தையுமெடுக்கச் சக்திமானாகவுமிருக்கிற பரமாத்மாவுக்கு மனுஷ்ய ரூபம் சிலாக்கியமுமல்ல. மற்றப்பிராணி ரூபங்கள் கேவலங்களுமல்ல. எறும்பு முதல் மனுஷ்ய பரியந்தமுள்ள சரீரங்கள் சிசுசரீரங்களாக ஈசுவரரால் பாவிக்கப்பட்டும் வருகின்றன. இந்தத் தத்துவத்தை நன்றாயறிந்த நமது ருஷிசிரேஷ்டர்கள் ஈசுவரர் எந்தெந்த ஸமயங்களில், எந்தெந்த ரூபத்தை ஸ்வீகரித்து பக்தர்களுக்குப் புலப்பட்டாரோ, அந்தந்தரூபங்கள் யாவற்றையும் கிரந்தங்களில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய பரிபக்குவத்திற்குத் தக்கபடி, நம்முடைய மனது ஷெரூபங்களுக்குள், எதில் திருடமாகப் பற்றுகிறதோ, அந்த ரூபத்தின் மூலமாய் ஈசுவராராதனஞ்செய்து முக்திபெறலாம். அந்த ரூபம் சிலாக்கியமா கேவலமா வென்பதை நிஜ பக்தர்கள் விசாரிக்கமாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் ஷெ ரூபத்தை ஒரு பிடிப்பாகவைத்துக்கொண்டிருக்கிறார்களேயொழிய, அதையே லக்ஷியமாக எண்ணமாட்டார்கள். அவர்களுடைய பக்திக்கு லக்ஷிய வஸ்து ஸர்வாந்தர்யாமியாயிருக்கிற பரம்பொருள். ரூபரஹிதராயிருக்கிற பரமாத்மாவுக்கு ஸகல ரூபங்களும் கேவலந்தானென்றதையும், அவரைக்குறிப்பிட்டுத் தியானஞ்செய்வதற்கு ஸகலரூபங்களும் கிராஹியந்தானென்பதையும் அவர்கள் நன்றாயறிந்தவர்கள். இப்பிரபஞ்சத்திலுள்ள ஸர்வமும் ஈசுவரருடைய விபூதிகளேயொழிய வேறில்லை. ஆத்ம விபூதிமத்தாயிருக்கிற வஸ்து ரூபவிஷயத்தில் உயர்வுதாழ்வென்கிற வியவஹாரம் அக்ஞானத்தாலேற்பட்டது. ஞானஸ்வரூபியாயிருக்கிற பரமாத்மாவுக்கு ஸகல ரூபங்களும் ஸ்வீகரிக்கத் தக்கதுதான். ஈசுவரருடைய திருவாக்கினாலேயே அவருடைய திவ்விய விபூதிகளுக்கு மனுஷிய சரீரம் மாத்திரமல்ல மற்ற ஸகலவிதமான கீழ்மேலென்று வியவஹரிக்கப்பட்ட சரீரங்களும் பாத்தியப்பட்டிருக்கின்றனவென்று கீதாசாரியர்களால் வியக்தமாய் வெளியிடப்பட்டிருக்கின்றது.

---

6-வது வினா:— "மனித ரூபம் கொடுப்பதினால் அவனுக்குண்டான பலவீனத்தையும் கொடுக்காமலிருக்க முடியுமா? அப்படி முடியாமையைப்பற்றி கடவுட்கு ஸ்நானஞ் செய்விப்பதும், அலங்கரிப்பதும், போஷிப்பதும் இவைகளோடு நிற்காமல் வருஷந்தோறுந் திருக்கலியாணஞ்செய்து வைப்பதும், இரண்டு பெண்கள் மணஞ்செய்விப்பதும், பள்ளியறைசேர்த்துவைப்பதும், அன்னிய மதத்தினர் மனதில் அசங்கியத்தை யுண்டுபண்ணாதா?

சிவாலயங்களில் கடவுள் மலஜலங்கழிப்பதாக வையாததேன்? சில விஷ்ணுவாலயங்களில் முன்னதை மட்டும் அனுஷ்டித்து வருவதாகத் தெரியவருவதற்குக் காரணமென்ன? பின்னதையும் வரவர அனுஷ்டித்து விடுவார்களோ?

இதற்கு விடை:— மனிதரூபத்தின் மூலமாய் ஈசுவரத்தியானஞ் செய்தால் சாதாரண மனிதனுடைய பலஹீனதையும் ஈசுவரரிடத்தில் ஆரோபிக்க வேண்டியதவசியமா? மனிதர்களுக்குள்ளே ஜாஸ்தியான தாரதம்மியம் நமக்குத்தென்படவில்லையா? யோக்கியனான மனுஷியனிடத்தில் அயோக்கிய மனுஷியனுடைய குணங்களும் கிருத்தியங்களுமில்லையென்று நாம் அறிந்திருப்பதில்லையா? சாதாரண ஜனங்களிடத்தில் காணப்படும் சில தோஷங்கள் பரமபக்தர்களிடத்தி லில்லாமலிருப்பதை நாம காணவில்லையா? நமது ஸ்தூல சரீரத்தில் காணப்படும் வியதைகளும் நமது மனதிலுண்டாகும் விகா

ரங்களும் மஹான்கள் விஷயத்தில் உண்டாகாமலிருக்கலாமென் றெண்ணுவது நியாயத்திற்கு முற்றிலும் விரோதமா? ஈசுவரரேஸ்வீகரித்திருக்கிற ஸ்தூலாதி சரீரங்களுக்கும் நமது சரீரங்களுக்குச் சமானமாய் பலஹீனதை யிருக்கவேணுமென்பது எவ்விதத்திலும் அவசியமில்லே. பஞ்சபூதங்களுக்கும் கர்த்தாவாயிருக்கிற பரமாத்மா ஷை பூதங்களின் ஸங்காரத்தை ஆவாணமாகக்கொண்டு அவதரித்தால் அவருடையசக்திக்குக்குறைவுண்டாகுமா? கிறிஸ்துவர்களால் கூறப்படும் பரமண்டலத்தில் மனுஷிய ரூபியாய் வீற்றிருக்கும் நாதனிடத்தில் பலஹீனதை யிருப்பதாக கிறிஸ்துவர்கள்கூட ஒப்புககொள்ளமாட்டார்களல்லவா? (இன்னும் வரும்.)

G. ராமச்சந்திரன்,

கைலாசபுரம்.

---

உ

## நரசிங்கநல்லூர் மடத்தின் மூன்றுவதுவருஷ மஹோத்ஸவம்.

---

திருநெல்வேலி பேட்டைக்கடுத்த நரசிங்கநல்லூரென்னும் தலத்தில் ஸ்ரீ கருணனந்த சுவாமிகளால் ஸ்தாபித்துள்ள 'ப்ரஹ்மநிஷ்டாள் மடத்தின் 3-வது வருஷோத்ஸவமானது, சென்ற டிசம்பர்மீ 25-உ ஆதிவாரந்தொடங்கி 30-உ சுக்கிரவாரம் வரையில் ஆக ஆறு தினங்களில் வெகு விமரிசையாய் நடந்தேறிற்று. ஷை மடத்து சுவாமிகளின் வேண்டுகோளுக் கிசைந்து பண்டிதர்களும் யதீஸ்வரர்களும் அக்காலத்தில் விஜயஞ் செய்திருந்தார்கள், அங்ஙனம் விஜயஞ் செய்தவர்களுக்குள் முக்கியமான சிலர்:—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரின் சிஷ்யர்களுக்கு ளொருவராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணனந்த சுவாமிகள், திருவனந்தபுரம் ப்ரஹ்மநிஷ்டாள் மடாதிபதியாகிய ஸ்ரீ சதானந்த சுவாமிகள், சென்னைவாசியாகிய ஆத்மாராம் சுவாமிகள், கோயம்புத்தூர் சுவாமிகள், மதுரை சொக்கப்ப சுவாமிகள் முதலானவர்களாவார்கள். இவ் வாறுதினங்களிலும் சுற்றுப்புறத்துள்ள ஜனங்கள் யாவருக்கும் மிருஷ்டான்ன போஜன மளிக்கப்பட்டது. பிரதமதினமாகிய ஆதிவாரம் மாலை 6-முதல் 8-மணிவரையிலும் மற்றைய தினங்களில் மாலை 3-முதல் 9-மணிவரையிலும் மகாசபையும் நடத்தப்பட்டது. அச்சபையில் சுமார் 3000-ஜனங்களுக்குமேல் நிறைந்திருந்தார்கள். இம் மூவாயிரவரும் ஆண்டு நடந்த அத்தியற்புதப் பிரசங்கங்களை "சித்திரப்பாவை யத்தக வடங்கி" என்றபடிச் சிரவணித்து ப்ரஹ்மானந்த சாகரத்தில் மூழ்கினராயினர்கள்.

பிரசங்கித்தவர்களும், விஷயங்களும்:— ஸ்ரீ ராமக்ருஷ்ணனந்த சுவாமிகள்; இந்துமதம், பக்தி, ஞானம், வைராக்கியம், ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளின் சரித்திரம் முதலாய விஷயங்களைக்குறித்து உபந்யசித்தனர். அவைகளுக்குள் முக்கியாம்சங்களாவன; எண்பத்துநான்கு இலட்ச யோனிகளில் மனுஷ சரீரந்தான் அதியுத்தமமானது. பகவானல் நமக்களிக்கப்பட்ட ஞானத்தினை விர்த்தி செய்துகொண்டு பகவத்தத்வத்தினை யறிதல்வேண்டும். திரிகுணங்களை யங்கமாகவுடைய மாயையினை ஞானமென்னும் வாளைக்கொண்டு சேதித்தல் வேண்டும். அதன்பின்னர்த்தான் ஆத்ம சொரூபம் விளங்கும். பகவத்ப்ராப்தியாவதற்கு, இராஜயோகம், கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகமென்னு மிந் நான்குமே முக்கிய சாதனங்கள். இராஜ யோகத்திற்கு இந்திரியநிக்கிரகம் பண்ணுவது அத்தியாவசிய மாகலின், அவ் யோகம் கைகூடுவதற்குத் துர்லபமாகமுடியும். ஞானயோக கர்மயோகங்களோ எல்லாராலும் அனுசந்திக்கப்பட முடியாதவை. நிற்பது பக்தியோகம் ஒன்றே. பக்தியோகமென்றுலென்னையென்னில், சகல இந்திரிய விர்த்திகளும் பகவத் தத்வத்தினிடத்திற் பிரவிர்த்திக்கும்படி செய்வதாம். ஆகவே, யோகம் நான்கினுள் பக்தியோகமொன்றே மிகவும் சுலபசாத்தியமாயிற்று. பக்தியும் ஞானமும வேறுபட்டுத்தோன்றுமாயினும் பரிபக்குவதசையி லிரண்டுமொன்றாகவேமுடியும். ஆகலின், இகபரசுகங்களைக் கோராமல் அதாவது பலாபேட்சையின்றி பக்தியினைத் தரும்படி பகவானைக் குறித்துப் பிரார்த்திக்க வேண்டியது. மனம் ஒன்றினை வென்றவர்களே சகல லோகங்களையும் வென்றவர்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன் இவ்வுலகிற் சஞ்சரித்த ஸ்ரீ சங்கரராமாநுஜ மத்வாசாரியாதிகள், யேசுகிறிஸ்து, மஹம்மது முதலான மஹநீயர்களால் தான் சகல லோகங்களும் ஆட்சிபெற்று வருகின்றன. அதாவது சகலலோகத்திலுள்ள ஜனங்களால் மேற்போந்த மஹநீயர்கள் கொண்டாடப்படுகிருர்கள். இம் மஹநீயர்கள் பகவத்தத்வத்தினை நன்குணர்ந்தவர்களாய் அவ் வக் காலதேச வர்த்தமானத்திற் கேற்ப உலகின்கண் அவதரித்து பரப்ரஹ்ம தத்வத்தினைத் தெரிந்துள்ளார். உலகில் சிலருக்குப்பித்தம் தலைக்சேறிக்கு திகொண்டிருப்பதனல் பயித்தியக்காரர்களாகி, ஒருவரையொருவர் உன் மதமும் உன் தெய்வமும் தாழ்ந்ததென்றும், என் மதமும் என் தெய்வமும் மிகவும் உயர்ந்ததென்றும் உசாவி வாக்குவாதத்திற்கும், மல் யுத்தத்திற்கும் இடுப்பையிழுத்துக் கட்டிக்கொண்டு நிற்கின்றனர். அங்ஙனம் செய்வது சுத்த மவுட்டியம், அவரவர்கள் தத்தம் மதங்களின்மீது அபிமானத்தினைக் கொண்டாட வேண்டியது தருமந்தான். எவன் வேண்டாமென்கிருன்? பரமத தூஷணம்பண்ணுமல் மனத்தினும் எள்ளளவேனும் குறைகூருமல் தன் சுயமதத்தின் இரகசியங்களையுணர்ந்து, உணர்ந்த அந்நெறியிலேயே நின்று, ஒவ்வொருவனும பரப்ரஹ்ம ப்ராப்திக்கு வேண்டிய மார்க்கத்தையுண்டாக்கிக் கொள்வதுதான் மிகவும் உசிதமாம்.

திருவனந்தபுரம் ஸ்ரீ சதானந்த சுவாமிகள், மாயையின் சொரூபத்தைக் குறித்தும் ஜீவாதம பரமாதம சொரூபங்களைக் குறித்தும் சபிகர்களுக்கு அதி யானந்தகரமாய் உபந்யசித்தனர். ஆத்மாராம் சுவாமிகள் மிகவும் பக்திரஸப்பிரதானமாயும் உபநிஷதார்த்தங்களையு முட்கொண்டுமுள்ள தேவாரம், திருவாசகம், ஸ்ரீ தாயுமான சுவாமிகள் பாடல், திருவருட்பா முதலிய தமிழ்க் கிரந்தங்களினின்று முக்கியமான சில திருப்பாக்களை யெடுத்துக் காட்டிச் சகல பண்டித பாமரர்களும் மெய்யசைவு கொள்ளாவண்ணம் பொருளுரைத்தனர்.

பிறகு, திருநெல்வேலி டவுணிலுள்ள வேணுவனேஸ்வராலய மண்டபத்தில் மேலெடுத்துக் கூறிய சுவாமி

கள் யாவரும் விக்கிரகாராதனை, பக்திமுதலிய விஷயங்க
ளைக்குறித்து உபந்யசித்தனர். பின்னர் கிறிஸ்துமதபோ
தகர்கள் செய்யும் தூராக்ஷேபனை யாவற்றையும் களைந்து
சகலப் பிராணிகளும் மோக்ஷப் பிராப்தியடைவதற்கு விக்
கிரகாராதனை தான் சுலபமும் கிட்டியதுமாயுள்ள சாதன
மெனத் தெளிவாய்க் காண்பிக்கப்பட்டது இந்தப் பிராந்
தியங்களிலுள்ள சகல ஜனங்களும் இம் மஹோத்ஸவத்
தினைக் கண்ணாரக்கண்டும், அதியற்புதப் பிரசங்கங்களைக்
காதாரக்கேட்டும் ப்ரஹ்மானந்த சாகரத்தில் மூழ்கினின்றார்
கள். இவ் வைபவங்களுடன் ஆறு நாட்சழித்து மறுதின
மாகிய சநிவாரம் காலை அவ்வவர்கள் தத்தம் தேசங்களுக்
கேகினர்.

இச் ஜில்லாவில் பிரதி வருஷாந்தத்தில் மத விஷய
சம்பந்தமுள்ள சபைகளை யிவ்வாறே நடத்தப்படும். ஆன
படியால், இதற்கு வேண்டிய எற்பாடுகளை ஒவ்வொருவ
ரும் தத்தம் சொந்த வேலையாகப் பாவிப்பார்களென்னும்
வாசனை காற்று வாட்டமாய் வீசுகிறது. சுபம்.

(Signed) K. A. Venkataramiah,
Student of
Sri Ramakrishnananda Jee,
61, Vyjia Vignesvarar Covil Street,
Choolai, MADRAS.

---

## விக்கிரஹாராதன கண்டன வெதிரேகம்.

(புத். க. இலக். ௰உ. 4-வதுபக்கத் தொடர்ச்சி)

சுவயம்புவாயிருத்தல்முதலிய காரணங்கள்பற்றிகோ
ற்பார்கட் கெளிதில் அருள்சுரத்தலால் ஸ்தலவிசேஷ மூர்
த்தவிசேஷங்களுண்டா யிருக்கின்றனவென்று சொல்லப்
பட்டிருக்கின்றது. இதன்கருத்து யாது? கடவுளுக்கு அ
வர்ஆவேசித்துநிற்கிற விக்கிரஹம் ஸ்வயம்புவாயிருத்தலா
னுதல், அநாதியாயிருத்தலானுதல், அரியதவததோரால் அ
மைக்கப்பட்டமையானுதல், ஒவ்விக்கிரஹவாயிலாகத்தம்
மைவழிபடுவோர்க்கு அருள்சுரக்கும் சத்தி மற்றையவிக்கி
ரஹங்களில் அவர் ஆவேசித்துநிற்கும்பொழுது இருக்கிற
தைவிட அதிகமா? கடவுளின் சத்தி அவர் சுவபாவ இய
ல்பைப் பொறுத்ததா? அவர் ஆவேசித்து நிற்கும் விக்கிர
ஹத்தின் தன்மையைப்பொறுத்ததா? கடவுளின் சத்தி
அவர் ஆவேசித்து நிற்கும் விக்கிரஹத்தின் தன்மையைப்
பொறுத்திருந்தால் விக்கிரஹமல்லாத மற்றவிடங்களில்
அவரிருக்கும்விதம் எப்படி? அங்கே அவர் அருள்
சுரக்குந்தன்மை எப்படி? கடவுள் அவரை வழிபடுவோர்க்
கு அருள் சுரப்பது வழிபடுவோர் மனப்பக்குவத்தைப்பொ
றுத்ததா? அவர் ஆவேசித்திருக்கு மிடத்தைப் பொறுத்த
தா? ஒரேதன்மையான பக்குவமுடைய மூன்றுபேர்களில்
ஒருவர் சுயம்புவாகிய விக்கிரஹ வாயிலாகவும், மற்றொரு
வர் சாதாரண விக்கிரஹ வாயிலாகவும், இன்னொருவர்
விக்கிரஹமல்லாதவிடத்திலிருந்தும் கடவுளைத் தியானித்
து, அப்படித்தியானிக்கும் சமயத்தில் அம் மூன்று பேர்க
ளுக்கு முள்ள பக்குவநிலை ஒரேதன்மையுடையதாகவு மி
ருப்பின், கடவுள் அம் மூன்றுபேர்களுக்குஞ் சுரக்கும் அரு
ளில் தாரதம்மிய மிருக்குமோ? "தினையின் பாகமும் பிரி
வது திருக்குறிப்பன்று" என்று ஸ்ரீமந் மாணிக்கவாசக
சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளி யிருக்கிறார்கள். ஆகவே
கடவுள் சர்வவியாபியாய், ஒவ்வோர் ஆன்மாவிடத்திலும்
தினையின் பாகமும் பிரியாதிருந்து, அந்தவந்த ஆன்மாவி
ன் பக்குவநிலைக்குத் தக்கபடி, அங்கங்கே அருள் சுரந்து
கொண்டிருக்கிறாரென்பது திண்ணமன்றோ? கடவுள் அ
ங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியா
கி அருளொடு நிறைந்திருப்பவரன்றோ? பார்க்குமிடமெ
ங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமயமான
வரன்றோ? இவ்வியல்பினையுடைய கடவுள் தம்மை விக்
கிரஹவாயிலாக வழிபடுங்காலத்தில், அதிக அருள் சுரப்
பர்போலும்! அதிலும் விக்கிரஹம் சுயம்புவாயிருத்தல் மு
தலிய காரணத்தால் அருள் சுரக்கும் தன்மை இன்னும்
அதிகப்படும்போலும் !! நன்று நன்று !!! அவ்வாறுகூறு
வது கடவுளுடைய சர்வ வியாபகத்துவத்துக்கும், அவர்
எல்லாரிடத்திலும் ஒரேதன்மையுடையராய் ஆன்மாவை
விட்டுத் தினையின்பாகமும் பிரிந்திராது, ஆன்மாவின்ப
க்குவத்துக்குத்தக்கபடி அருள்சுரக்கிறார் என்னும் உண்மை
க்கும் விரோதமல்லவோ? அவ்வாறு கூறுவது தேவதூ
ஷணமாய்முடிகின்றதன்றோ? விக்கிரஹம் சுயம்புவாயிரு
த்தலினாலென்ன? அநாதியாயிருத்தலினா லென்ன? அ
ரியதவத்தோரால் அமைக்கப்பட்டமையா லென்ன? அ
ருள்சுரக்கும்தன்மை அங்கு அதிகப்படுவதெப்படி? அரு
ள்சுரக்கும்தன்மை எவ்விடத்திலாவது அவர்பாற் குன்றி
யிருந்ததா? அருள்சுரக்கும் தன்மை எவ்விடத்திலும் யா
ரிடத்திலும் பரிபூரணமாயிருக்க வில்லையோ? சர்வவியா
பகராய், எவ்விடத்திலும் குறைவற்ற ஒரேதன்மையையு
டையவராய், ஜீவாத்மாவின் பக்குவத்துக்குத் தக்கபடி அ
ருள்சுரக்கத் தினையின்பாகமும் பிரிந்திராது காத்திருப்ப
வராயுள்ள அருள்வள்ளலாகிய கடவுளைத் தியானித்தற்
பொருட்டு விக்கிரஹம் எற்படுத்தி அவ்விக்கிரஹவாயிலா
கவழிபடுதல் கடவுள் சர்வவியாபகராயும் பார்க்குமிடமெ
ங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணராயும் இருக்கி
றார் என்பதை மறக்கும்படி செய்யுமென்றும், அதுதான்
விக்கிரஹாராதனத்தினா லுண்டாகும் அநேக கெடுதல்க
ளில் ஒன்று என்றும் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.
விக்கிரஹங்களின் தாரதம்மியத்தைஒப்புக்கொண்டு கூறிய
"விக்கிரஹாராதன கண்டன வெதிரேக" விடை விக்கிர
ஹாராதன கண்டனத்திற்கே துணைசெய்துநிற்பதாக என
க்குத்தோன்றுகிறது. இதற்குச் சம்பந்தமான விடையில்
"ஒரு நியாயாதிபதியைப்பார்க்கிலும் மற்றொருநியாயாதி
பதி அனுகூலம் செய்வானெனக் கட்சிகள் முயற்சிப்பது
மனப்பற்றே யாதலையொப்ப, ஈண்டும் வழிபடுவோரது ம
னப்பற்றேயாம்" என்று கடைசியிற் சொல்லப்பட் டிருக்
கிறது. முதலில் "ஸ்தல விசேஷம், மூர்த்தி விசேஷம்,
விக்கிரஹம் அநாதியா யிருத்தல் முதலிய காரணத்தால் எ
ளிதில் அருள்சுரப்பதினா"லென்றும், அப்பால் "வழிபடுவா
ரது மனப்பற்றேயாம்" என்றும் சொல்வது ஒன்றுக்கொ
ன்று பொருத்தமா யிருப்பதாகத் தோன்றவில்லை. வழிப
டுவோர் மனப்பற்றே யானால், விக்கிரஹங்களில் ஒன்றுக்
கொன்று தாரதம்மியமில்லையா? தாரதம்மிய மிருப்பதா
யும் அதற்குக் காரணம் இன்னதென்றும் முன்னமேசொ

ல்வியிருக்கிறபடியால், மனப்பற்றேயா மென்பதின் கருத்து இன்னதென்று புலப்படவில்லை. ஆகிலும் ஆண்டெடுத்துக்கொண்ட நியாயாதிபதி உவமை பொருந்தாதெனபது சுருக்கிக் கூறுவேன்:— நியாயாதிபதிகள் அநேகருள், உண்மையில் ஒருவருக்கொருவர் தாரதம்மியம் உண்டு. ஒருவனைவிட மற்றொருவர் சங்கதிகளின் உண்மையைக் கண்டுபிடிக்கிறதில் அதிகத்திறமையுடையராயிருத்தல் கூடும். ஒருவனைவிட மற்றொருவர் யோக்கியமாய் நடத்தல்கூடும். நியாயாதிபதிகள் வெவ்வேறு ஆட்களாகவும், வேவ்வேறு தன்மையை யுடையவர்களாயும் இருப்பதினுல், அவர்களுள் ஒருவனை விட மற்றொருவனை தாரதம்மியப்படுத்திப் பார்த்தற்குக் காரணம் சகுதிகளின் மனப்பற்றன்று. உண்மையில், நியாயாதிபதிகளிடத்துள்ள தாரதம்மிய வியல்பைப் பொறுத்தே நிற்கிறது.

(இன்னும் வரும்.)

பாளையங்கோட்டை 29—12—04. } திருமங்கைமாநர்கவாசி.

## சமாசாரக்குறிப்பு.

நாரதர்.

தர்மகர்த்தர்:— திருநெல்வேலி ஸ்ரீ காந்திமதியம்பா சமேத ஸ்ரீ நெல்லையப்பர் கோயிற்குப் புது நியமனம்பெற்ற தர்மகர்த்தர் ஸ்ரீ வைத்தீஸ்வரமய்யரவர்கள் நாடோறுங் குறித்த திருக்கோயிற்கு வந்து ஆலய கைங்கரியங்கள் சரியாய் நடந்து வருகின்றனவாவெனக் கவனித்து, வரவு செலவு கணக்குகளையும் அவ்வப்போதே சரிபார்த்துக் கையெழுத்து வைத்து வருவதாகத் தெரியவருகின்றது. புதுவதாய் நியமனம் பெற்றவர்கள் பெற்றுச் சில காலம்வரையும் இவ்வாறு பரபரப்பாய்த் தம் கடமையிற் கவனஞ் செலுத்துவது புதிதன்று. ஆனல் எப்போதும் அவ்வாறு நடந்துவருவது தான் புதுமை. மேலும் குறித்த ஆலய கைங்கரியங்கள் எச் சிவாகமத்தை அநுசரித்து நடக்கவேண்டுமோ, அச்சிவாகம வழியை அறிந்தவ்வாறு நடக்கின்றனவா வென்பதையும் குறித்த தர்மகர்த்தரவர்கள் கவனித்து வருவார்களாயின் மிக்க புகழும் புண்ணியமும் பெறுவர்.

***

தத்வப் பிரகாச சபை:—இப்பெயரிய சபையொன்று திருநெல்வேலியில் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெறுதல் இப்பத்திரிகை படிப்போர் முன்னரே அறிந்திருப்பார்கள். சின்னுண் முன்னர்த் திருநெல்வேலி வசந்தமண்டபத்தில் ஷெ சபையின் அக்கிராசனதிபதி மக-ள-ள-ஸ்ரீ வைக்கீல் இராமச்சந்திர ஐயரவர்கள் ஜாதிவிஷயமாய்ச் செய்த இரண்டு பிரசங்கட்குப்பின், இதுவனை குறித்த சபைக்கு அதின் அக்கிராசனதிபதிகளிருவரும் வரவில்லை. அவ்விரண்டு பிரசங்கங்களும் பிராம்மணர்க்கும் அவரல்லாதார்க்கும் இந் நகரிவிருந்த ஒற்றுமையைச் சிறிது நெகிழ்த்திருப்பதாகச் சனங்கள் சொல்லிக்கொள்ளுகின்றூர்கள். அஃதெவ்வாருயினும் ஆகுக. சாதியின் ஏற்றத்தாழ்வுகளைப் பற்றிய பிரசங்கம் யார்செய்யினும் அது இக்காலத்திற்குப் பொருத்தமுடையதன்றுபோலும்.

***

சைவப்ரகாச சபை:— இப்பெயரிய சபையொன்று திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையம்பலத்திலே சில சிவனடியார்களாற் ருபிக்கப்பட்டுச் சிவபுராண படனஞ்செய்தல் முதலிய நோக்கத்தோடு சில நாட்களாக நடைபெற்று வருகின்றது. இப்போது திருநெல்வேலித் தலபுராண படனம் நடைபெறுகின்றது.

***

உண்மை தேர்வோர்:— "உண்மை தேர்வோர்" (Truth Seekers) எனக் கையொப்பமிட்ட பகிரங்க கடிதமொன்று உண்மைதேர்வோர் சிலரால் அச்சியற்றி மேலே குறித்த மக-ள-ள-ஸ்ரீ வக்கீல் ஜி. இராமச்சந்திர ஐயரவர்கட்கு அனுப்பப்பட்டிருந்ததாம். அக்கடிதம் பிறர்பொருட்டும் வெளியிடப்பட்டிருந்தமை கண்டாம். அதற்கு ஷெ ஐயரவர்களாற் "பஹிரங்க விடை" யொன்றும் வெளியிடப்பட்டிருக்கின்றது. இவ் விரண்டு துண்டுப் பத்திரிகைகளில் முன்னையது ஷெ ஐயரவர்கள் செய்துபோந்த சாதி விஷயமான பிரசங்கங்களினின் றெழுந்ததுபோலும்.

***

திருநெல்வேலி சாஸ்வதிவிலாச புத்தகசாலை:— சென்ற மகரசங்கிரம தினத்திலே இதன் சபை கூடிற்று. இது மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் கிளையாகச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டது.

***

திருநெல்வேலிச் சித்தாந்த சைவர் பலர் தாம் ஓம்புதற்குரிய சைவ சிரார்த்தத்தை இதுவனை ஊர்ப்புரோகிதராயுள்ள ஸ்மார்த்தர்களுக்குக் கொடுத்து வந்தார்கள். அது தவறென்றறிந்து இப்பொழுது சைவாசாரியர்கட்குக் கொடுக்கத்தொடங்கியிருக்கின்றூர்கள்.

***

மாட்சிமை பொருந்திய திருவாங்கூர் மகாராஜா அவர்கள் சென்னைக்குப் போகுமார்க்கமாய் இன்று இவ்விடம் திருநெல்வேலிக்கு விஜயமானூர்கள். இன்னும நாலு தினம் இங்குள்ள தமது ராஜமாளிகையிற்றங்கி யிருப்பார்கள்

***

திருநெல்வேலி முனிசிப்பல் செக்ரட்டேரி, முனியப்பபிள்ளையவர்கள் தம்வேலையை ஒப்புக்கொண்டார்கள் அவர்கள் தம்முடைய கடமையை சரிவரப் பார்த்து வருவார்கள் என்று ஜனங்களால் நயப்படுகின்றது.

***

### பத்திராதிபர் குறிப்பு.

"காஞ்சிபுரம், ஸ்ரீ சிசதாந்த சிவநேசத் திருக்கூட்டம், 50-வது, ஸ்ரீ திருவேகம்பத் தலயாத்திரையும, திருவருட்பாத் திருமுறை கஜாரூட மஹோற்சவ பத்தானந்தமும்" என்னும் விஞ்ஞாபன பத்திரம் காலந்தாழ்த்துக் கிடைத்தமையாலும், ஷெ மஹோத்ஸவம் (22—1—05) 10-உயன்றே நிறைவேறிவிட்டமையாலும் ஈண்டுப் பிரசுரிக்கப்படவில்லை. மாயாவரதது மஸகோளரி ஸ்ரீமந்.நா. கதிரைவேற் பிள்ளையவர்கட்குப், ஸ்ரீமத் கா. மு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் முதலிய திருக்கூட்டத் தவர்கட்கும் மிக்க வந்தனம் சொல்கின்றோம். [ப—ர்]

"திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ்க."

திருச்சிற்றம்பலம்

Printed and published by M. DRAVIAM PILLAI,
Aryapirakasini Press, Tinnevelly Bridge.